
# ரேணுகா தேவி எனும் குத்துக்கல் தண்டு மாரியம்மன்

-சாந்திப்பிரியா-

( பாபாஜி சித்தர் ஆலயம், பிப்ரவரி, 2008 இதழில் வெளியான இந்த கதையின் விரிவாக்கப்பட்ட மறு பதிப்பு இது )







ரேணுகா தேவியின் ஆலயங்களில் உள்ள சில உருவங்கள்

*வழி: பிரசித்தி பெற்ற ஆலயம் உள்ள இடங்கள் சென்னையில் மந்தைவெளி மார்கெட், பங்களூரில் கிருஷ்ணா பார்க் அருகில், பெல்காமில் சௌன்தத்தி என்ற தாலுக்கா, திருவண்ணாமலையில் மலையின் பின்புறத்தில் உள்ள வெங்கடாசலபதி ஆலயம் அருகில், ஹிமாசல் பிரதேசத்தில் சிர்மூர் என்ற இடத்தில் மற்றும் மஹாராஷ்டிராவில் மாஹுர்.*

## தேவியின் பெருமை

ரேணுகா பரமேஸ்வரி என்பவள் பரசுராமரின் தாயார். தத்தத்திரேயர் அவளை காயத்ரி என போற்றி வணங்கினார். அவள் மிகவும் தயாள குணத்தைக் கொண்டவள். ரேணுகா தேவி பிறப்பைப் பற்றி பல்வேறு கதைகள் உண்டு. ரேணுகா மன்னன் என்பவன் நடத்திய யாகத்தில் இருந்துத் தோன்றியவள்தான் ரேணுகா. அவள் மிகவும் அழகானவள்.

## தேவியின் கதை

அகஸ்திய முனிவரின் ஆலோசனைப்படி அவளுக்கு எட்டு வயதான பொழுது அவளை ஜமதக்னி முனிவருக்கு மனைவியாக்கினார். கடுமையான தவத்தினை மேற்கொண்டு சக்திகள் பல பெற்றிருந்த ஜமதக்னி முனிவருடன் நிழல் போல அவர் இருந்த கடுமையான மலைப் பிரதேசங்களில் முகம் கோணாமல் அவருடன் வாழ்ந்து வந்தாள். காலையில் நதியில் சென்று குளித்தப் பின் பானையில் நீர் எடுத்துக் கொண்டு ஆற்றில் ஓடும் பாம்பைப் பிடித்து அதைக் கயிறு போல சுற்றி தலை மீது வைத்து, அதன் மீது குடத்தை விழாமல் இருக்க வைத்துக் கொண்டு வீடு திரும்புவது வழக்கம். அவளுக்குப் பிறந்த ஐந்து மகன்களில் இளையவர் பரசுராமர்.

ஒருமுறை ரேணுகா தேவியானவள் என்றும் போல மலப்பாரி என்ற ஆற்றில் குளிக்க இறங்கிய பொழுது அங்கு ஆண்களும் பெண்களுமான தேவ கன்னிகையினர் ஜலக்கிரீடை செய்து கொண்டு இருந்ததைக் கண்டாள். அதைக் கண்டவளுடைய மனதில் காமம் எழுந்து தானும் தன்னுடைய கணவருடன் அப்படி இருப்பதைப் போல சில நொடிகள் நினைத்துப் பார்க்க அவளுடைய புனிதம் குலைந்தது. அவளால் நதியில் இருந்து நீர் எடுக்க முடீயாமல் போயிற்று. குடத்தில் நீர் நிறம்பவில்லை. அதைச் சுமந்து செல்ல ஒரு பாம்புக் கூடக் கிடைக்கவில்லை. நீர்க் கொண்டு வராமல் வீடு திரும்பியவள் மீது கடும் கோபமுற்ற ஜமதக்னி அவளை முதலில் துரத்தி விட்டார். தன் மனதில் தோன்றிய மன சபலத்திற்கு மனம் வருந்தி காட்டில் வந்து கண்களை மூடித் தவம் இருந்தாள். அவள் மூடிய கண்களில் தோன்றிய இரு முனிவர்கள் அவளை சிவனைத் துதித்தபடி மூன்று நாட்கள் விரதம் இருந்தால் அவளுக்கு கணவனுடன் மீண்டும் சேரும் வழி பிறக்கும் எனவும் ஆனால் அவள் நான்கு நாட்கள் விதவையாக வாழ வேண்டி இருக்கும் என்றும் கூறி மறைந்தனர். அவளும் அவர்கள் கூறியபடியே தவம் இருந்து மீண்டும் முனிவரிடம் செல்ல, அவர் அவளுடைய தலையை வெட்டி எறியுமாறு தன்னுடைய மகன்களுக்கு ஆணையிட்டார்.

அவருடைய மகன்களில் நால்வர் அதை செய்ய மறுக்க அவர்கள் அலிகளாக மாற சாபமிட்டார். ஆனால் நான்காம் மகன் பரசுராமர் அவள் சிரசை தந்தையின் ஆணைப்படி வெட்டி எறிந்தப் பின் தன்னுடைய தாயாருக்கு உயிர் பிச்சைக் கேட்க மகனுடைய பாசத்தை உணர்ந்தவர் அவளுக்கு மீண்டும் பிறவி கொடுத்தார். அதற்கு முன்னர் வெட்டப்பட்டு விழுந்த அவளுடைய தலையோ இன்னும் பல தலைகளாக உரு மாறி வெவ்வேறு இடங்களில் சென்று விழ அந்த தலையை அலிகளாக மாறிய மகன்கள் வணங்கி பூஜித்தனர். அதில் ஒன்றுதான் கர்நாடகத்தில் பெல்காமில் இருக்கும் எல்லம்ம குட்டா எனும் இடத்தில் ஆலயமாக ஆயிற்று என்று ஒரு கிராமியக் கதை உண்டு. கணவனுடன் மனத்தாங்கள் உள்ள

பெண்கள், கணவன் மனம் மாறி அவர்களுடன் வாழ்வில் வளமாக இருக்க வேண்டிக் கொண்டு அங்கு சென்று வணங்கி பூஜிக்கத் துவங்கினராம். அதற்காகத்தான் அப்படி ஒரு நாடகம் அறங்கேறியதாம்.

இன்னொரு கதையின்படி தன்னுடைய கணவனுடன் மீண்டும் சேர்ந்து கொண்ட ரேணுகா தேவீ, நெறி தவறா பத்தினியாக வாழ்ந்திருந்தவள், தன்னுடைய கணவர் காத்தவீர்யனின் மகன்களால் அரக்கத்தனமாகக் கொல்லப்பட்ட பொழுது பரசுராமனிடம் அவர்களை அழிக்குமாறு கேட்டாள். அவரும் அதை செய்து முடிக்க, உயிருடன் தன்னையும் தன் இறந்து போன கணவருடன் தத்தாத்திரேயர் கூறும் இடத்தில் தகனம் செய்யும்படிக் கூறினாள். பரசுராமனும் தத்தாத்திரேயர் யார் என்பதை அறியாமல் அவரைத் தேடிச் சென்ற பொழுது அவர் மூலம் தன்னுடைய தாயார்தான் ரேணுகா தேவி என்ற காயத்ரி என்ற உண்மையை தெரிந்து கொண்டார். மீண்டும் உயிர் பிழைத்து எழுந்தார் ஜமதக்னி முனிவர் என்றாலும் அவர் உயிருடன் இல்லாமல் இருந்த நான்கு நாட்கள் விதைவயாக இருக்கும்படி ரேணுகா தேவிக்கு ஆயிற்று. அவர்கள் இருவரும் அதன் பின் தேவலோகத்திற்குச் சென்று வாழத் துவங்கினர்.

## தேவியின் ஆலயங்கள் எழுந்த கதை

அதன் பின்னர் தன்னுடைய கடமைகளை முடித்துக் கொண்ட பரசுராமர் மனம் அமைதி அடைய பத்ரிகா எனும் மலைக்குச் சென்று தவம் இருக்க நினைத்தார். அவரிடம் ஒவ்வொரு வருடமும் வந்து தன்னை வணங்க வேண்டும் என ரேணுகா தேவி ஆணையிட்டாள். சிர்மூர் என்ற இடத்தில் அவளுடைய தலை விழுந்த இடத்தில் ஆலயம் அமைந்தது. ஆகவே பரசுராமர் இமாசலப் பிரதேசத்தில் உள்ள சிர்மூர் என்ற இடத்தில் அவளுடைய தலை விழுந்த இடத்தில் தோன்றிய ஆலயத்தில் அவளை வணங்குவதாக ஐதீகம் நிலவுகின்றது. அந்த நேரத்தில் அந்த ஆலயத்தில் வருட விழா அமர்க்களமாக நடைபெறுகின்றது.

அது போலவே சென்னையில் மந்தைவெளியில் ஒரு ஆலயம் ரேணுகா தேவிக்கு எழுந்தது. அதன் கதையும் சுவையானது. சுமார் மூன்னூறு ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாள் அந்த இடத்தில் வறுமையில் வாழ்ந்து கொண்டு வேதனையில் இருந்த ஒரு மூதாட்டியின் கனவில் ரேணுகா தேவி எழுந்தருளி 'குத்துக் கல்லாக நானிருக்கையில் நீயேன் மன அமைதி இன்றி அங்கும் இங்கும் அலைகின்றாய் ?' என தான் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குத்துக் கல் உருவில் எழுந்தருளி உள்ளதாக ஒரு பக்தனிடம் கூறினாளாம். அவளும் அந்த விஷயத்தை மற்றவர்க்குக் கூறி அந்த குத்துக் கல்லுக்கு ஆடி மாத வெள்ளிக் கிழமைகளில் மஞ்சளும் குங்குமம் இட்டு அம்மனாக வணங்கத் துவங்கினராம். பலரும் பல

நன்மைகள் பெறலாயினர். இப்படியாக இருந்த தெருமுனையில் வழிபடப்பட்ட குத்துக் கல்லுக்கு, 1904 ஆம் ஆண்டு நாராயணசாமி நாயக்கர் என்பவர் தலைமையில் குழு அமைத்து அந்த குத்துக் கல் அம்மனுக்கு விழா எடுக்கத் துவங்கினர். அந்த இடமே வியந்து நிற்கும் அளவில் அந்த விழா நடைபெறத் துவங்கியது. பின்னர் திரு கோவிந்தராஜு என்பவர் அந்த இடத்திலேயே அம்மனுக்கு ஒரு ஆலயம் எழுப்ப முடிவு செய்து 1945 ஆம் ஆண்டில் ஒரே இரவில் ஆட்களைக் கொண்டு ரேணுகா பரமேஸ்வரி என்ற ஆலயத்தை எழுப்பினார்.

அப்படிப்பட்ட ரேணுகா தேவிக்கு பெங்களூரிலும் ஆலயம் உள்ளது என்பது பலருக்குத் தெரிந்திருக்கவில்லை. பங்களூரில் பசவங்குடி என்ற பகுதிக்கும் ஜெயநகர் என்ற பகுதிக்கும் இடையில் கிருஷ்ணா பார்க் என்ற இடம் உள்ளது. அதன் ஒரு பகுதியில் அமைந்து உள்ளது ரேணுகா தேவி ஆலயம். அந்த இடத்தில் இருந்து கிடைத்த சிலையில் இருந்து எழுப்பப்பட்ட ஆலயம் ( ஸ்வயம்பு) என்று கூறுகின்றனர். அதன் விவரங்கள் சரிவரக் கிடைக்கவில்லை என்றாலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அமைத்திருந்த சிறு ஆலயம் இன்று புதுப்பிக்கப்பட்டு உள்ளது